மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 14ம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமாரசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>14.10.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்து மற்றும் என்னுடைய சொத்தின் பழைய காலை எண்.974 என்றால் சரியல்ல. காலை எண்.908. பழைய காலை எண்.974 இன் மொத்த விஸ்தீரணம் 15 ஏக்கர் 20 செனட் என்றால் அது எனக்கு தெரியாது 974 காலை தான் ரீ.ச.எண்.908 ஆக மாற்றப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது காலைஎண்.908 மட்டும்தான் தெரியும். மேற்படி 908 காலை தான் 908/1, 908/2A, 908/2B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

2. 908/1 புஞ்சை ஏக்கர் 5.19 பூமிக்கு எனது தகப்பனார் முத்துசாமி பெயரில் இருந்து தற்போது எனது பெயருக்கு பட்டா உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 908/2 பி மற்றும் 908/2 ஏ ஆகிய காலைகளுக்கு வாதிகளின் முன் பாக்கியஸ்தர்களான சேமலை

போயான் என்பவர் பெயரிலிருந்து தற்சமயம் மேற்படியாரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாதிகளின் பெயர்களுக்கு பட்டா ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உட்பிரிவு விபரம் பட்டா வழங்கப்பட்ட விபரம் குறித்து வாதிகள் தங்கள் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.நான் எதிர்வழக்குறையில் குறிப்பிட்டவாறு 908 காலை முழுவதும் எனக்கு பாத்தியப்பட்ட உள்ளது என்பதை காண்பிக்க கூடிய வகையில் நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. என் தகப்பனார் முத்துசாமி கிரயம் பெறுவதற்கு முன்பே சேமலை போயன் என்பவர் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தந்தை முத்துசாமி கவுண்டர் கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், என் தந்தை கிரயம் பெறவில்லை எனது தாத்தா தான் கிரயம் வாங்கினார் எனது தாத்தா கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் 1958 ஆம் ஆண்டு எனது தந்தை முத்துசாமி கவுண்டர் தான் கிரயம் பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல என் தந்தை பெற்ற கிரைய ஆவணத்திலேயே க.ச.எண்.974 காலையில் புஞ்சை ஏக்கர் 4 ஏக்கர் 75 சென்ட் பூமியை மட்டுமே செக்கு பந்தி கண்டு வாங்கி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை பெற்ற மேற்படி கிரைய ஆவணத்திலேயே சேமலை போயன் பூமிக்கு வடபுறமாக என செக்கு பந்தை கண்டு தான் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

4. இந்த வழக்கில் செம்மலை போயன் என் என்பவர் கிரையம் பெற்ற ஆவணத்தை வாதி தாக்கல் செய்துள்ளதை நான் பார்த்து தெரிந்து

கொண்டேனா என்றால் இல்லை வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திலேயே 974 ஆம் எண் காலையில் 10 ஏக்கர் 45 சென்ட் பூமியை தான் கிரயம் பெற்றுள்ளார் என வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் படித்துப் பார்த்தேன் செம்மலை போ என் என்பவர் கிரையம் பெற்ற சொத்துக்களையும் எனது தந்தை முத்துசாமி கவுண்டர் கிரயம் பெற்ற சொத்துக்களையும் பொறுத்து அனுசரித்து தான் ரீசர்வேயில் உட்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அவரவர் பகுதிகளுக்கு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5. பொதுவாக தான் இதுவரை அனுபவம் செய்து வருகிறோம். உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்ட விபரமும் அதன் அடிப்படையில் அனுபவம் செய்து வரப்படும் விபரமும் எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆனால் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆரம்ப காலத்தில் இருந்து தாவா சொத்து காலியிடமாக தான் உள்ளது என்றால் ஆடு, மாடு மேய்க்கும் பகுதியாக உள்ளது தாவா சொத்தில் கிணறு, வீடு உள்ளதா என்றால், கிணறு மட்டும் உள்ளது கட்டிடங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்தை சேமலை போயன் என்பவர் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு அதில் கிணறு வெட்டி, வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

6. அந்த கிணற்றுக்கான மின் இணைப்பு சேமலை போயன் என்பவர் பெயரில் பெறப்பட்டு தற்போது வாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சேமலை போயன் என்பவர் பெயரில் தான் உள்ளது தாவா சொத்தில் இருந்த வீடானது நத்தமாக மாற்றப்பட்டு தனியாக

உட்பிரிவு செய்யப்பட்டு சேமலை போயன் என்பவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த நத்தம் பட்டாவானது சேமலை போயன் என்பவர் பெயரிலிருந்து வாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டதற்கான ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

7. தற்சமயம் சேமலை போயன் என்பவரின் வாரிசுகள் வாதிகள் என்பதற்கு உண்டான ஆவணங்கள் அனைத்தும் வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதனை மறுக்கவும் ஆட்சேபனை செய்யவும் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல என் தந்தை முத்துசாமி கவுண்டர் என்பவருக்கு கிரையப்படியும் அனுபவ படியும் அவருக்கு கிரையம் பெற்ற 4 ஏக்கர் 75 சென்ட் பூமி மட்டும் தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா சொத்துக்களை எந்த காலத்திலும் நானோ எனது தந்தையோ அனுபவம் செய்து வந்தது கிடையாது என்றும் வழக்கிற்காக அனுபவம் செய்வதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதை காட்டுவதற்கு நாங்கள் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் சொத்துக்களின் மூல ஆவணங்கள் எங்கள் கைவசம் இருந்தும் அதை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. நாங்கள் தாக்கல் செய்துள்ள 30.07.2018 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணம் எனது தாயார் மற்றும் சகோதரி ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அடிப்படையில் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம்

ஏதேனும் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்திலேயே தாவா சொத்து தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதை பொறுத்து நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10. அந்த பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் வங்கியில் கடன் பெற்று அதை திருப்பி செலுத்தி விட்டோம் என்றால் சரிதான். தாவா சொத்தை தவறுதலாக எங்கள் பாக பாத்திய விடுதலை ஆவணத்தில் நாங்கள் சேர்த்து விட்டோம் என்றும் அதை திருத்திக் கொள்ளவோ அல்லது புதிதாக வேறு ஆவணத்தை ஏற்படுத்திக் கொள்ளவோ வாதிகள் பலமுறை வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆறு மாதத்திற்கு முன்பு கேட்டு நாங்கள் அதை மறுத்து விட்டோம் என்று சொன்னால் என்னை யாரும் வந்து கேட்கவில்லை. 2021 ஜூன் மாதத்தில் நான் திருத்தல் பத்திரம் எழுதி கொடுக்க முடியாது என்று சொன்னதால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

11. வாதிகள் இந்த வழக்கை தாவா சொத்தை பொறுத்து நாங்கள் செய்து கொண்ட பாகப்பாத்திய விடுதலை ஆவணமும் அடமான ஆவணமும் செல்லாது என்று தான் வாதிகள் இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் கடனை திரும்ப கட்டி அடமானத்தை முடித்தேன் என்றால் இல்லை அதற்கு முன்பே முடித்து விட்டேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலேயே 2023 ஆம் ஆண்டு தான் நான் பெற்ற வங்கி கடனை செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. அதனால் தான் வாதிகள் வங்கியையும் அது குறித்த பரிகாரங்களையும் தாவாவில் இருந்து நீக்கம் செய்து உள்ளார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தவறாக பாகப்பாத்திய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளதாலும் அதை வைத்து வங்கி கடன் பெற்றுள்ளதாலும் மட்டுமே தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. நாளது தேதி வரை தாவா சொத்தில் எந்த ஒரு பாத்தியமும் அனுபவமும் இல்லாமல் வாதிகளை இழுத்தடிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தில் இந்த வழக்கில் நான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

13. எவ்வாறேனும் தாவா சொத்தை நாங்கள் அடைந்து விட வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் கிரைய வகையில் சேமலை போயன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து பின்னிட்டு வாரிசு அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

14. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் வழக்கு குறித்த முழு விவரங்களையும் நாங்கள் தெரிந்து கொண்டும் பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள தவறை பொறுத்து ரத்து ஆவணமோ அல்லது பிழை திருத்தல் ஆவணமோ ஏற்படுத்த நாங்கள் என்ன முயற்சியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதிகள் கேட்டுள்ளவாறு இந்த வழக்கில் அவர்களுக்கு பரிகாரம் செலவு தொகையுடன் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.14 19:10:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்